பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 79

வியாழக்கிழமை
13 பெப்ரவரி 2025

மாசி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மீண்டும் பொலிஸார் கெடுபிடி!

யாழ்ப்பாணம், பெப். 13
தையிட்டி - திஸ்ஸ விகாரைக்குச் செல்லும் வழியில் நேற்றுப் பொலிஸார் கடும் பாதுகாப்புக் கெடுபிடியில் 11




யாழ்ப்பாணம் - தையிட்டி

# திஸ்ஸ விகாரையை உடன் அகற்றுங்கள்!

### பொதுமக்கள் நேற்று எழுச்சிப் போர்
### கட்சி பேதங்கள் இன்றித் திரண்டனர்

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 13**

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை உடனடியாக அகற்றப்பட வேண்டும். மக்களின் காணிகளை மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பலநூறு பொதுமக்கள் கட்சி பேதங்கள் இல்லாமல் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11



## திஸ்ஸ விகாரைக்கு எதிராக முஸ்லிம்களும் இணைந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 13
தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக இடம்பெற்றுவரும் தொடர் போராட்டத்தில் நேற்று முஸ்லிம்களும் இணைந்துகொண்டனர். 11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

கிளிநொச்சி, பெப். 13
கிளிநொச்சி - புளியம்பொக்கணை பகுதியில் இளைஞர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள் 11

ஐ.தே.க. – ஐ.ம.ச.

## பேச்சுகள் படுதோல்வி!

கொழும்பு, பெப். 13
ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள், உடன்பாடுகள் எட்டப்படாத காரணத்தால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப் 11

## வர்த்தகத்தில் படையினர் மக்களுக்குப் பாதிப்புகள்

### பாதுகாப்புச் செயலருக்கும் எடுத்துரைத்ததாக ஐ.நா.சபையின் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 13
வடமாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்துள்ள வர்த்தக நடவடிக்கைகளால் சிவில் சமூகத்தினருக்கு 11

போயா தினத்தில் களேபரம்!

## அர்ச்சுனா எம்.பி. தாக்கி ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், பெப். 13
நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவால் கடும் தாக்குதலுக்கு உள்ளான நபர் குருதிக் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு நான்கு தையல்கள் போடப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதியொன்றிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. 11

## காலநிலைப் பிரச்சினையால் முழு உலகுக்கும் சவாலே!

### டுபாய் மாநாட்டில் ஜனாதிபதி உரை



கொழும்பு, பெப். 13
உலக காலநிலைப் பிரச்சினைகள் வறியவர், செல்வந்தர் என்று பாராமல் அனைவரினதும் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கின்றன. ஆதலால், தேச எல்லைகளைக் கடந்து சவால்களுக்கு முகங்கொடுக்க நாங்கள் ஒன்றிணைய வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்.
ஐக்கிய அரபு இராச்சியத் 11




'பறுவம் எண்டா சிலர் குணங்கொள்றது வழமைதான் பாருங்கோ'

அக்கிரமங்களைப் புரிந்தபின்

## தொப்புள்கொடி உறவுகளென்று போலிப் பாசாங்கால் பயனில்லை

### தமிழக மீனவர்களின் நடவடிக்கைக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடும் காட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13
இலங்கையின் கடல் வளத்தையும், ஈழத்தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்துவிட்டு, 'தொப்புள்கொடி உறவுகள்' என்று கூறுவதால் பயனில்லை என்று தமிழக மீனவர்களைக் கண்டித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன்.
இது தொடர்பில் அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
தமிழக மீனவர்களின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாள்கள் அத்துமீறி நுழைந்தார்கள். தற்போது ஏழு 11

## சிறுமியைப் பயன்படுத்தி சங்கிலி நூதனத் திருட்டு

### இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 13
சிறுமியொருவரை அனுப்பி பிறிதொரு சிறுமியிடமிருந்து தங்கச் சங்கிலியை அபகரித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலை - உயரப்புலம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியேற்றம்!

பிரிட்டனில் சட்ட விரோதமாகக் குடியேறிய 19 ஆயிரம் பேர் வெளியேற்றப் பட்டுள்ளனர். (ம)

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3987 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 08 28 44 50 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1054 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 38 49 51 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0013 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 2 5 6 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2093 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 32 41 54 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5745 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 3 2 3 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1775 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 02 27 29 45 |
| விசேட எழுத்து | B |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 12.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 320 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 3 7 |

### அரச சேவைகளில் உள்ள

# 7,456 வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தீர்மானம்

கொழும்பு, பெப்.13

**அரச சேவையில் உள்ள 7 ஆயிரத்து 456 பதவி வெற்றிடங்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அரசசேவையில் ஆள்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நிலவும் 3 ஆயிரம் பதவி வெற்றிடங்களையும், பாதுகாப்பு அமைச்சில் நிலவும் 9 பதவி வெற்றிடங்களையும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சில் நிலவும் 179 பதவி வெற்றிடங்களையும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சில் நிலவும் 132 பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் 400 பதவி வெற்றிடங்களையும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் நிலவும் 161 பதவி வெற்றிடங்களையும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நிலவும் 3,519 பதவி வெற்றிடங்களையும், மேல் மற்றும் கிழக்கு மாகாணசபைகளில் நிலவும் 39 பதவி வெற்றிடங்களையும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிலவும் 17 பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 12.02.2025 | புதன்கிழமை | 0453 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Q | 5 7 1 0 1 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.02.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2719 | Y | 29 35 46 57 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 08 10 11 29 | 4880 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.02.2025 | புதன்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ஓ | 02 14 16 42 | 4431 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 12.02.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 39 | 01 10 20 25 | 1895 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 04 28 35 54 | 2545 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.02.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 03 12 25 51 | 2103 |

## கடவுச்சீட்டு வரிசைகள் ஒரு மாதத்தில் ஒழியும்!

கொழும்பு, பெப்.13

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வரும் தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள கடவுச்சீட்டு வரிசைகளை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு குடியகல்வுத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுப் பற்றாக்குறைக்கு முந்தைய ஆட்சியாளர்களின் தவறான நிர்வாகமே காரணம் என்று தெரிவித்துள்ள அந்த அதிகாரி, கடவுச்சீட்டு வரிசைகள் ஒருமாதத்துக்குள் இல்லாமல் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்துக்குள் 24 மணி நேர சேவை தொடங்கப்படுவதால், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் உள்ள அனைத்து ஊழியர்களும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உறுதிபூண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## குவைத் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, பெப்.13

2025 உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் குவைத் பிரதமர் ஷேக் அஹமட் அப்துல்லா அல் அஹமட் அல் சபாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்துவது மற்றும் சந்தையைப் பன்முகப்படுத்துவது குறித்து இருதரப்பும் கவனம் செலுத்தியதுடன், அதற்கான புதிய உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)



## புலிகள் தாக்கியபோதுகூட மின்தடை ஏற்பட்டதில்லை

### சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப்.13

போர் இடம்பெற்ற காலத்தில் 33 ஆயிரம் மெகாவோல்ட் மின்பிறப்பாக்கியைப் புலிகள் தீயிட்டு எரித்தபோது கூட, நாடளாவிய ரீதியில் மின் துண்டிக்கப்படவில்லை. ஆகையால் குரங்கின்மீது பழிசுமத்திக் குரங்குச் சேட்டைகள் காண்பிக்க வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? கடந்த அரசாங்கங்களின் குறை கூறியே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

தற்போது ஆட்சியிலிருந்து கொண்டும் அதையே செய்கின்றனர்.

மேடைகளில் வீரவசனம் பேசுவதை விட, நடைமுறையில் ஆட்சி செய்வது சிக்கல் என்பதை இப்போது ஜே.பி.வி. புரிந்துகொண்டிருக்கும்.

அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்ற முற்படவேண்டாம். ராஜபக்சக்களை ஆட்சியில் அமர்த்தி, அவர்களைத் துரத்துவதற்கு மைத்திரிக்கு வாக்களித்து பின்னர் கோத்தாபயவை நாட்டை விட்டு ஓடச் செய்தவர்களே உங்களையும் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர் என்பதை மறந்துவிட வேண்டாம் - என்றார். (ஏ-இ)

# புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுங்கள்

### முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13

மைத்திரி -ரணில் நல்லாட்சி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட அரசிலமைப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை உள்ளது. எனவே நல்லாட்சி அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பை நிறைவேற்றுவதொன்றும் கடினமான விடயமல்ல. தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார அளித்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண

# மருத்துவ, கல்வி வசதிக்கு ஜப்பான் ரூ.50 மில்லியன்



**யாழ்ப்பாணம், பெப். 13**

**வடக்கு மாகாணத்தில் மருத்துவ மற்றும் கல்வி வசதிகளை மேடுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் சுமார் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.**

இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குதற்கான இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் வடக்கு மாகாணத்துக்கு முதன்முறையாக வந்துள்ள இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியா இயக்மட்டா கையெழுத்திட்டார். இந்த நிகழ்வு வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் முன்னிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது வட மாகாணத்திலுள்ள பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக ஜப்பான் தூதுவர் இசோமாட்டா உறுதியளித்தார். (ச-125)

## காற்றுமாசு; கர்ப்பிணிகள் அவதானம்

நாட்டில் காற்றின் தரம் குறைந்துவருவதன் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்களின் கருவுக்கு பாதிக்கப்படும் என்றுசுவாசமருத்துவர்துமிந்த யசரத்னே தெரிவித்துள்ளார். மாசுபட்ட காற்றானது கருவின் எடையைக் குறைக்க வழிவகுக்கும். அத்துடன் புதிதாகப் பிறந்த குழந்தைகளில் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். எனவே காற்றுமாசு குறித்து கர்ப்பிணிகள் எச்சரிக்கையாகஇருக்கவேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

பதில் திடீர் மரணவிசாரணை அதிகாரியாக

## வவுனியா மாவட்டத்துக்கு சுரேந்திரசேகரன் நியமனம்

வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக லா.சுரேந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார். வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரியாகச் செயற்பட்டு வந்த லா.சுரேந்திரசேகரன் தற்போது கடமையாற்றும் பகுதிக்கு மேலதிகமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெங்கலசெட்டிகுளம் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)



## 36,000 ரூபா இலஞ்சம்; 56 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, பெப்.13

வீதி அபிவிருத்தித் திட்டத்துக்கான விலைமனுக்கோரல் பணத்தை விடுவிப்பதற்காக ஒப்பந்ததாரரிடமிருந்து இலஞ்சம் பெற்ற தொழில்நுட்ப அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 56 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மடுல்ல பிரதேசசபையின் முன்னாள் தொழில்நுட்ப அதிகாரி ஒருவருக்கே 36ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதற்காக இவ்வாறு கடூழியச் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, பிரதிவாதிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தும் நீதிபதி தீர்ப்பளித்தார். (ச-இ)

## போதையில் நின்றவர்கள் மாணவன் மீது தாக்குதல்!

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, வைரவபுளியங்குளத்தில் உயர்தர வகுப்பு மாணவன் மீது போதையில் நின்ற இளைஞர் குழுவொன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. தாக்குதலில், பலத்த காயமடைந்த மாணவன் வவுனியா தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-25,110,18)

# வடக்கு-கிழக்கு வீதிகளை புனரமைக்க முன்னுரிமை

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரண்டாயிரம் கிலோமீற்றர் வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ளன. அதன்படி வடக்கு மாகாணத்தில் 1500 கிலோ மீற்றர் வீதிகளையும் கிழக்கு மாகாணத்தில் 500 கிலோ மீற்றர் வீதிகளையும் புனரமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள வீதிகள் மிக மோசமான நிலையில் காணப்படுவதால் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ளதாக பெருந்தெருக்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி அமைப்புகளிடமிருந்து திருத்தப்பட வேண்டிய வீதிகள் தொடர்பான பிரேரணைகளைப் பெற்று இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச-இ)




ஆட்சி மாறினாலும் காட்சி மாறேலை எண்ட புலம்பல் இப்ப ஒவ்வொருநாளும் கூடிக்கொண்டே வருகுது. முந்தின அரசாங்கம் விட்ட பிழையளை நாங்கள் மாத்தி, எல்லாத்தையும் சரியாச் செய்வம் எண்டு சொல்லித்தான் திசைகாட்டிக்காரர் வாக்குகளை அள்ளினவை. ஆனால் முந்தின அரசாங்கம் என்னென்ன பிழையளை விட்டிச்சோ அதுகளை மாத்திற சிலமனைக் காணவேயில்லை. அதுக்கு நல்ல உதாரணம், யாழ்ப்பாணத்திலையும், கிளி நொச்சியிலையும் ரணில் காலத்தில போடுப்பட்ட பதில் மாவட்டச் செயலர்மார்தான் இன்னும் அந்தந்த மாவட்ட நிர்வாக அலுவல்களைப் பாக்கினம். உண்மையில ஒரு ஆத்திர அவசரத்துக்கு ஆளில்லாக் குறைக்குத்தான் இப்பிடி பதில் மாவட்டச் செயலர் எண்டு ஆக்களை நியமிக்கிறவை. கார்ல போகேக்க ரயர் காத்துப்போனா, பயணத்தை நிப்பாட்டாமல் முடிக்கிறதுக்காக மேலதிகமா கொண்டுபோற ஒரு ரயரை (ஸ்டெப்னி) மாத்திப் போட்டு போறவையெல்லோ. அதுமாதிரித்தான் இந்தப் பதில் பதவியளும். ஆனால் இஞ்ச என்னெண்டால் பதில் மாவட்டச் செயலர்மாரையே அப்பிடியே நிரந்தரமா வைச்சிருக்கிறதின்ர மர்மம் என்னெண்டு விளங்கேலை.

இஞ்ச ஆளுமையான நிர்வாகம் செய்யக் கூடிய அதிகாரியள் இல்லையெண்டு அரசாங்கம் நினைக்குதோ தெரியேலை. ஆனால் இப்ப பதில் மாவட்டச் செயலர்மாரா இருக்கிறவையை விடவும் சேர்விஸ்ஸையும்,ஆளுமையிலையும் கூடின அதிகாரிமார் இருக்கத்தான் செய்யினம். தனிய இஞ்ச மட்டும் குண்டுச்சட்டிக்க குதிரை ஓடிக்கொண்டிருக்காமல், சிங்கள ஏரியாக்களிலையும் போய் வேலை செய்த, மூண்டு மொழியும் சரளமாப் பேசக்கூடியவையும் அந்த ஆளுமையான அதிகாரியளுக்குள்ள இருக்கினம். எண்டாலும் அவையை இந்த அரசாங்கம் கணக்கில எடுக்கிறதாத் தெரியேலை. சிலவேளை இப்பிடி பதில் மாவட்டச் செயலர்மாரை வைச்சிருந்தால், தாங்கள் சொல்ற எல்லாத்துக்கும் தலையாட்டுவினம் எண்டு அரசாங்கம் நினைக்குதோ தெரியேலை.

இப்பிடி பதில் மாவட்டச் செயலர்மாரை இவ்வளவு காலம் வைச்சிருக்கிறது பிழையெண்டு நிர்வாகசேவை அதிகாரியள் சங்கத்தின்ர விதியிலையே இருக்காம். அப்பிடியிருந்தும் இப்பிடி இலங்கையிலையே முக்கியமான ரண்டு மாவட்டங்களுக்கு இப்பிடி ஸ்டெப்னி அதிகாரிமாரை வைச்சு,காலம் முழுக்க காரோட்டலாம் எண்டு திசைகாட்டிக்காரர் நினைக்கிறதின்ர நோக்கம் என்னெண்டு ஆருக்கும் விளங்கேலை. உண்மையில இப்பிடி பதில் அதிகாரிமாரை வைச்சிருக்கிறதால சில முடிவுகளை காத்திரமா எடுக்கவோ, நிர்வாகரீதியா கடும் நடவடிக்கையளை எடுக்கவோ முடியாமல் அந்தந்த மா வட்டங்கள் பின் தங்கிப் போறதுக்குத்தான் சான்ஸ் கூட. அப்பிடி யாழ்ப்பாணமும், கிளிநொச்சியும் உருப்படாமல் போகவேணுமெண்டுதான் திசைகாட்டிக்காரர், பதில் அதிகாரிமாரையே இழுத்துப்பிடிச்சு வைச்சிருக்கினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்து சேரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர் செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

## கோம்பையன்மணல் மயானத்தில்

# மருத்துவக்கழிவை எரியூட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணம், கோம்பையன்மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவக் கழிவு எரியூட்டியால் பாதிப்பு ஏற்படுகின்றது என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படும்போது வெளியாகும் புகையால் சுவாசப் பிரச்சினை, துர்நாற்றம் என்பன ஏற்படுகின்றன என்று மக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் இந்த எரியூட்டி கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டுப் பாவனைக்கு



வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (ஏ-125)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம்,பெப். 13

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் சா.சுதர்சன் முதன்மை விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (ச-17)

⊗⊗⊗

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் ச.அகிலன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஸ்ணானந்தன், பாடசாலை நலன்விரும்பி திருமதி ஜெயமலர் விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ச-22,159)

## வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ். வண்ணை மத்தியில் எழுந்தருளியுள்ள வேம்படி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் மார்ச் மாதம்11 ஆம் திகதி 10மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் 12ஆம் திகதி காலை 10மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)



கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர், பழனியாண்டவர் ஆலய மணவாளக்கோலத் திருவிழா கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்று சுவாமி வீதிவலம் வந்தார். (ச-17)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச தினத்தன்று சிறப்புப் பூசைகள் இடம்பெற்று சுவாமி திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வந்தார். (ச-17)

## திறப்புவிழாவும் திறனாய்வும்

யாழ்ப்பாணம்,பெப். 13

யாழ்.ஊரெழு கணேசா வித்தியாசாலை விளையாட்டு மைதான நுழைவாயில் திறப்புவிழாவும், இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வித்தியாலய முதல்வர் இ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீ, நுழைவாயிலுக்கு அனுசரணை வழங்கியவரின் தாயார் திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

வெற்றியைக் கொண்டாடுவது நல்லது,
ஆனால் தோல்வியின் படிப்பினைகளுக்கு செவிசாய்ப்பது
மிகவும் முக்கியமானது.

– பில் கேட்ஸ்–

## மாறுபடும் ஒஸ்லோவின் நீதித்தராசு!

‘காஸாவில் இருந்து பலஸ்தீனர்கள் வெளியேற்றப்படுவார்கள். காஸாவை அமெரிக்கா தனது முழுமையான கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளும்’ என்ற அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அறிவிப்பை முழுமூச்சாகக் கண்டித்திருக்கின்றது நோர்வே (ஒஸ்லோ). காஸாவை ஆக்கிரமிக்கும் அமெரிக்காவின் சதியைக் கண்டிப்பதுடன், தன் கடமையை ஒஸ்லோ நிறுத்திக்கொள்ளவில்லை. மாறாக, ஒருபடி மேல்சென்று பலஸ்தீனத்தை ‘தனிநாடாக’ ஏற்று அங்கீகரிப்பதாகவும் அறிவித்திருக்கின்றது. நோர்வே மட்டுமல்ல, ஐரோப்பிய ஒன்றியமும் இதே அறிவிப்பைத்தான் விடுத்திருக்கின்றது. இதன்படி, மத்திய கிழக்கில் -அதிலும் குறிப்பாக காஸாவில் அமைதி திரும்ப வேண்டுமாயின், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் என்ற ‘இருநாட்டுக் கொள்கையே ஒரே தீர்வு’ என்பதே இந்தத் தரப்புகளின் கருத்தாக அமைந்துள்ளது. பலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டால் அதன் இராணுவக் கொள்கைகள் தொடர்பில் இந்த நாடுகள் தெளிவாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், பலஸ்தீனம் என்பது சுதந்திரத் தனிநாடு என்பதில் ஒன்றித்திருக்கின்றது.

பலஸ்தீனத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் முறையான அங்கீகாரம் ஒன்று இப்போதைக்குக் கிடைக்கச் சாத்தியமேயில்லை. ஏனெனில், அமெரிக்காவின் வீட்டோ அதிகாரம் பலஸ்தீனர்களின் வேணவாக்களுக்கு முன்பாக பேய் போன்று வியாபித்திருக்கின்றது. எனவே, ஐக்கிய நாடுகள் சபைக்கு அப்பாற்பட்ட தீர்வுகளும், ஐ.நா.வுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் வலியுறுத்தல்களும்தான் பலஸ்தீனர்களின் சுதந்திரத்தில் காலத்தேவையானவை. ஆதலால், நோர்வேயினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் அறிவிப்பு பலஸ்தீனர்களைப் பொறுத்தவரை ‘சஹாராவில் வீழ்ந்த பனித்துளி’தான்.

ஆனால், இன்று பலஸ்தீனத்துக்காகத் துடிக்கும் நோர்வே, ஈழத்தமிழர்களின் விடயத்தில் தான் ஆற்றிய பங்களிப்பு என்ன? என்ற பரிசீலனைகளையும் செய்ய வேண்டியிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாதிருந்த அக்காலத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளை - இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளில் நோர்வேக்கும் பிரதான பங்குண்டு. இதனால்தான், ‘ஒஸ்லோ புரிந்துணர்வு உடன்படிக்கை’ போன்ற ஒப்பந் தங்களை நோர்வேயின் தலையீட்டில் செய்துகொள்ள புலிகள் இணங்கினர். அந்தளவுக்கு தமிழர்களின்நலன்களை நோர்வே புரிந்து வைத்திருக்கின்றது என்ற நம்பிக்கை எம்மிடத்தில் இருக்கவும் செய்தது. ஆனால், ‘சுதந்திரப் பலஸ்தீன’ அறிவிப்புப் போன்ற தற்துணிவான அறிவிப்புகளை ஈழத்தமிழர் விடயத்தில் மேற்கொள்வதற்கு நோர்வேயால் முடிந்ததா? அல்லது நோர்வே செய்துவிட்ட காரியம்தான் என்ன?

இன்று காஸாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் காட்சிகள்தான் அன்று முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றன. இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிராக இன்று முன்வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போர்க்குற்றச்சாட்டுகள்தான் இலங்கை இராணுவத் துக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டன. காஸாவில் இன அழிப்பின் மூலம் சியோனிச யூதம். முள்ளிவாய்க்காலில் இன அழிப்பின் மூலம் ‘பேரினவாதப் பௌத்தம்’ அவ்வளவே வேறுபாடு. மற்றும்படி குருதியும் ஒன்றுதான், சகதியும் ஒன்றுதான், சதைத்துண்டுகளும் ஒன்றுதான். எமக்கு நோர்வே இழைத்ததோ வரலாற்றுத் தவறு. ஈழத்தமிழர்களின் முதுகைக் குத்திக் கிழித்துக்கொண்டிருக்கும் வாள்களில் ஒன்றில் நோர்வேயின் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றது.



## ஈ.பி.எப். மேம்படுத்தலுக்காக தகவல் தொழில்நுட்பம்

கொழும்பு, பெப்.13

**ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளை நேர்த்தியாகப் பேணுவதற்கு சாத்திய வளத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பத் தொகுதியின் தேவை இனங்காணப்பட்டுள்ளது.**

ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவத் தொகுதியொன்றை உருவாக்குவதற்கு உலக வங்கிக் குழுமத்தின் நிதிப்பிரிவு நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டில் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தனியார் நிறுவனமொன்றின் ஆலோசனையின் கீழ் புதிய முகாமைத்துவத் தொகுதியின் திட்டம் மற்றும் தேவையான விவரக் குறிப்புகளின் தயாரிப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொகுதி இணைப்பு தெரிவு செய்வதற்காக பெறுகைச் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையின் பெரும் ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேமலாப நிதியத்தின் தற்போதய மொத்த அங்கத்தவர்களின் கணக்குகளின் எண்ணிக்கை 21.5 மில்லியனாகும். சேமலாப நிதி அனுப்பப்பட்டு இயங்குநிலையிலுள்ள சேவை வழங்குநர்களின் எண்ணிக்கை 77 ஆயிரம் ஆகும். (எ-இ)

## 139 பொலிஸார் இடமாற்றம்

கொழும்பு, பெப்.13

ஒரே தடவையில் 139 பொலிஸ் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் ஒரேதடவையில் அதிகளவான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவது இதுவே முதல் முறை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 105 தலைமை பொலிஸ் ஆய்வாளர்களும் 34 பொலிஸ் ஆய்வாளர்களும் உள்ளடங்குகின்றனர். (ச-இ)

## சிறுவர் துஷ்பிரயோகங்கள்: கையாள தனியான பிரிவு

கொழும்பு, பெப்.13

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் தனியான பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

துஷ்பிரயோகம் இடம்பெற்ற தினத்திலிருந்து வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு சுமார் 5 வருடங்கள் செல்கின்றன.

இதனால் குற்றவாளிகள் தப்பிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

எனவே சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் தனியான பிரிவை ஸ்தாபித்து வழக்கு விசாரணைகளை விரைவில் முடிவுறுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

### ஆஸி- இலங்கை

## நட்புறவுச் சங்கத்தின் தலைவர்கள் தெரிவு

கொழும்பு, பெப்.13

அவுஸ்திரேலியா- இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் இணைத்தலைவர்களாக பொதுநிர்வாக அமைச்சர் அபயரத்னவும் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ச- 25, 6)

## சந்தேகநபருடன் சென்ற முச்சக்கரவண்டி விபத்து

### பொலிஸ் அதிகாரி பலி

நீதிமன்றத்துக்கு சந்தேகநபர் ஒருவரை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி வீதியோரத்திலிருந்த தூணில் மோதியதில் விபத்துக்குள்ளாகியதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அகலவத்தை, கெகுலந்தல பகுதியில், நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. (ச-இ)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை

வெள்ளிக்கிழமை - மாசி - 02

14.02.2025

சுபநேரம் : 06.33 - 08.03

ராகுகாலம் : 11.03 - 12.33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் 'கிளீன் சிறிலங்கா'

# குப்பைமேடாக யாழ்.மாநகர வீதி

யாழ்ப்பாணம், பெப். 13

**யாழ். மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பழம் வீதியில் குப்பைகள் கொட்டப்பட்டு குப்பைமேடாகக் காட்சியளிக்கின்றது. இதுதொடர்பில் யாழ்.மாநகரசபை அசண்டையீனமாகச் செயற்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவிக்கையில், யாழ் . மானிப்பாய் பிரதான வீதியில் பழம் வீதி காணப்படுகின்றது. குறித்த பழம் வீதியில் அமைந்துள்ள குறுக்கு வீதியொன்றிலேயே இவ்வாறு அதிகளவான குப்பைகள் கொட்டப்பட்டு குப்பைமேடாகக் காட்சியளிக்கின்றது. மருத்துவக் கழிவுகள் முதல் பல திண்மக்கழிவுகள் வரை குறித்த பகுதியில் கொட்டப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசவுதுடன் கால்நடைகளும் குப்பைகளை இழுத்துச் செல்வதால் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுகின்றது.

இது குறித்து வடமாகாண சபையின் அபயம் மற்றும் யாழ்.மாநகரசபை என்பவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே நாடளாவிய ரீதியில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் எமது வீதிக்கு விமோசனம் கிடைக்காதா? என்றனர். (ச-125)

## தமிழ்த்தேசத்தின் மேன்மைக்கு பாடுபட்டவர் ஊடகர் பாரதி

விக்னேஸ்வரன் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 13

மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி ஊடகத்துறையில் மாத்திரமன்றி அதற்கும் அப்பால் தமிழ் மக்களின் அரசியல் சமூக , பொருளாதார உரிமைகளுக்காக ஆற்றிய சேவைகள் மற்றும் அர்பணிப்புக்கள் ஏராளம். தமிழ்த் தேசம் பற்றிய தெளிவான உணர்வும் அதனைக் கட்டியெழுப்புவதற்கான சிந்தனையும் அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. இவ்வாறு அவரின் மறைவையொட்டி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், நான் அரசியலுக்குள் நுழைந்த கடந்த 12 வருட காலத்தில் ஏராளமான தடவைகள் அவரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து அவருடன் கலந்துரையாடியுள்ளேன். தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் பற்றி மிகவும் தெளிவான நிலைப்பாடுகளை கொண்டிருந்தார். அவரின் ஆலோசனைகள் எனக்கு உதவியாக இருந்திருக்கின்றன.

தமிழ் ஊடகத்துறைக்கும், அரசியலுக்கும், சமூகத்துக்கும் பாரதி வழிகாட்டவேண்டியவை இன்னமும் ஏராளம் இருக்கின்றபோது இத்தனை விரைவாக இறைவன் அவரை தன்பக்கம் வரவழைத்துக் கொண்டமை எமது துரதிஷ்டமே என்றுள்ளது. (ச-இ)

யாழ்.பல்கலைக்கழக

## மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகம் சுழற்சிமுறை

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ் .பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகக் காலம் கடந்த வருட இறுதியில் நிறைவடைந்த நிலையில் புதிய மாணவர் ஒன்றியத்தை உருவாக்குவதில் இழுபறி நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் கிளையினால் மாணவர் ஒன்றியத்தினை அமைப்பதற்கு கடந்த வாரம் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் மாணவர் நலச்சேவைகள் கிளையினால் இன்னமும் மாணவர் ஒன்றியம் அமைக்கப்படாமையினால் அடுத்த தலைமைத்துவத்துக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இதே வேளை மாணவர் நலன்களும் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதனடிப்படையில் இவ்வருடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமைப் பதவி முகாமைத்துவப் பீடத்துக்கும் செயலாளர் பதவி விஞ்ஞானபீடத்துக்கும் பொருளாளர் பதவி கலைப்பீடத்துக்கும் சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளன. அதேவேளை மாணவர்கள் தொடர்ச்சியாக மாணவர் நலச்சேவைகள் கிளையை நாடுகின்ற போதிலும் மாணவர் நலச்சேவைகள் கிளை அவற்றை தட்டிக்கழிக்கின்றது என்று மாணவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ச-125)



## மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா

மன்னார், பெப்.13

சமூக சேவைகள் திணைக்களம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் இணையம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் டிலிசன் பயஸ் தலைமையில் மன்னார் நகர பொதுவிளையாட்டு

மைதானத்தில் நேற்றுமுன்தினம்செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எம்.சிறிஸ்கந்தகுமார், கௌரவ விருந்தினர்களாக முசலி உதவிப் பிரதேச செயலாளர், மற்றும் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-56)

## 'ஒரு யாழ்ப்பாணத்து வீடு' செல்வா திரையரங்கில்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்.திரைப்படக்கழகத்தினரின் ஏற்பாட்டில், சிவசாமி பிரேம்ராஜ் நெறியாள்கையில் நோர்வேயில் தயாரிக்கப்பட்ட "ஒரு யாழ்ப்பாணத்து வீடு" திரைப்படம், யாழ்.தந்தை செல்வா திரையரங்கில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

இந்தத் திரைப்படம் வெளிநாட்டு மோகம், வளமான வாழ்வுக்காக ஏற்கனவே ஒப்புக்கொண்ட உறவுகளை நிராகரித்தல், குடும்பத்தின் எதிர்கால நிலைக்காக பலியாக்கப்படும் ஆண் அல்லது பெண் உறவுகளின் உடைவில் நொருங்கிப்போகும் மனிதர்கள் பற்றிய கதையாகும்.

இதற்கு அனுமதி இலவசம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)





கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு நேற்றுமுன் தினம் சிறப்பு அபிஷேகம், பூஜைகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வந்தார். (ச- 25,17)

## அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 13

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்.மூளாயில் புனரமைக்கப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லம் மற்றும் உருவச்சிலையின் திறப்புவிழா யாழ்.மூளாயில் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அன்னாரது உருவச்சிலையை வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் திறந்து வைத்தார்.

அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசி நினைவு இல்லத்தை இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி திரை நீக்கம் செய்துவைத்தார்.

அதேவேளை, குறித்த இல்லத்தில் அமிர்தலிங்கத்தின் அரசியல் பயணம் மற்றும் குடும்ப வாழ்வு தொடர்பான கிடைத்தற்கரிய உருவப்படங்களும் அமிர்தலிங்கம் எழுதிய நூல்கள் மற்றும் அவர் சார்ந்த நூல்களும் காட்சிப்படுத்தப்பட்டன. ( ச-66,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மெய்வல்லுநர் போட்டி !

யாழ்ப்பாணம், பெப்.13

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியால யத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல் விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமாரன், சிறப்பு விருந் தினராக கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் ஸ்ரீ.ரூபகானன் ,சாவகச்சேரி மருத்துவமனை மருந்து கலவையாளர் இ.சிவதரன் ,பழைய மாணவனும் பாடசாலை நலன்விரும்பியுமான சு.கிருஷ்ணபகவான் ஆகியோர் கலந்துகொண் டனர். (ச-22,159)



## சான்றிதழ் வழங்கலும் நூல் வெளியீடும்

கிளிநொச்சி, பெப். 13

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் 13 உறுப்பி னர்களுக்கான நிலையான வைப்புச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இ. தெய்வேந்திரனின் "பழமரக் காடுகள்" என்ற நூல் வெளியீடும் கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன. சங்கத் தலைவர் திருமதி யசோதா கிருஸ்ணகுமார் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் சங்கத்தின் துணைத்தலைவர் கி. மகிந்தகுமார் நூல் வெளி யீட்டுரையை நிகழ்த்த, சங்கத்தலைவர் நூலை வெளியிட்டு வைத்தார். பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்டார். (ச-25)



## வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி,பெப்.13

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மாவடியம்மன் புதுக்காடுக் கிராமத்தில் நோர்வே தமிழ் உறவுகளின் நிதியனுசரணையில் நமசிவாய மூதாளர் பேணலக பவுண்டே சனால் அமைக்கப்பட்ட 3 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. 15 வருடங்களுக்கு மேலாக வீடு மற்றும் குடிநீர் மலசலகூட வசதியின்றி பல அரச அதிகாரிகளிடம் வேண்டிய போதிலும் தமக்கான அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் வாழ்ந்துவந்த குடும்பங் களுக்கே இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-33-113)



## பல்துறைசார் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம் , பெப். 13

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச் சின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லி ணக்கப் பிரிவின் அனுசரணையுடன் யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நாவாந்துறை தெற்கு கிராம அலுவலர் பிரி வைச் சேர்ந்த பொதுமக்களுக்கு அண்மை யில் பல்துறைசார் விழிப்புணர்வு மேற் கொள்ளப்பட்டது.

நிகழ்வில், பிரதேச செயலக தேசிய ஒரு மைப்பாடு மற்றும் நல்லிணக்க அபிவி ருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர், மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர், சமு தாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத் தர் ஆகியோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர். (ச-22,159)



பிரதேச செயலக சமூக சேவைகள் பராமரிப்புக் கிளை யின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச மருத்துவமுகாம் யாழ். பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட் டதுடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட் டன. (ச-22, 159)



## பரிசில் நாள் நிகழ்வு

கொடிகாமம், பெப். 13

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் பாடசாலையின் ஆருத்ரா அரங் கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்திபெற்ற 42 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து, நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தெரிவுசெய் யப்பட்ட 5 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிக ளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாகாணரீதியான செயற்பட்டு மகிழ் வோம் போட்டிகளில் சாதனைபடைத்த மாணவர் களும் ஆசிய சதுரங்கப் போட்டியில் இலங்கை சார்பாக வெண்கலப் பதக்கம் பெற்ற அணியில் இடம்பிடித்த கி.மானசாவும் கௌரவிக்கப்பட்ட னர். (ச- 25, 159)



யாழ். வடமராட்சி கிழக்கு கொட்டோடை பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினால் கல்விச் சாதனையாளர்கள் 9 பேருக்கான கௌரவிப்பு நிகழ்வு சபையின் தலைவர் சி.தா.காண்டீபன் தலைமையில் ஆலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
C M Y B

# ஒப்பற்ற ஊடகவியலின் இலக்கணமானவர் பாரதி!


## முன்னாள் எம்.பி. சரவணபவன் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 13

இலங்கையில் மிகச்சிறந்த ஊடகப் பணிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரே ஊடகவியலாளர் பாரதி. தமிழ் ஊடகப் பரப்புக்கு அவர் ஆற்றிய பணிகள் அருமருந்தானவை இவ்வாறு தனது இரங்கற் குறிப்பில் தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கொண்ட கொள்கையின் மீதான பிடிப்பும், பற்றும் ஊடகத் துறைக்குப் பிரதானமானவை. அத்தகைய விடயங்களில் இருந்து இம்மியும் பிசகாதவர் ஊடகவியலாளர் பாரதி. நீண்ட ஊடக வாழ்வில் அவர் தன் கொள்கைகளை எங்கும் விட்டுக் கொடுத்தாகப் பதிவில்லை. நெருக்குவாரங்கள், தடைகள் எல்லாவற்றையும் வெற்றி கண்டு மிகச் சிறந்த ஊடகவியலாளராக அவர் திகழ்ந்தார். மூத்த ஊடகவியலாளர் என்ற வகையில் இன்றைய இளம் ஊடகவியலாளர்களுக்கு ஒரு முன்மாதிரிகையான வாழ்க்கையை இராஜநாயகம் பாரதி வாழ்ந்து காட்டியிருக்கின்றார். பாரதியின் மறைவு ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பு என்பதற்கு அப்பால், நிச்சயம் ஈடு செய்யப்பட வேண்டிய இழப்பாகவும் அமைகின்றது - என்றுள்ளது. (ம)



# ஜப்பானியத் தூதுவர் கிளிநொச்சி விஜயம்

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ இசோமட்டா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது ஜப்பானிய நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி, முகமாலைப்பகுதியில் நடைபெறும், குகலோரெஸ் மனிதாபிமான கண்ணியகற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன், ஊழியர்களுடனும் கலந்துரையாடினார். (ச-25-27)

## பெயர்மாற்றம்

வேலணை கிழக்கு, 3 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் **வேதாரணியம் தர்ஜிதன்** ஆகிய நான் எனது பெயரை **வேதாரணியம் தர்சன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் வேதாரணியம் தர்சன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**வேதாரணியம் தர்சன்**

## தேசிய அடையாள அட்டை தொடர்பானது

துரைசிங்கம் தீபன் 199534201402 எனும் இலக்கம் கொண்ட எனது தேசிய அடையாள அட்டையினை கடந்த 17.01.2025 அன்று கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் வைத்து ஒருவர் மோசடியாக பெற்று மேலும் எனது கையடக்க தொலைபேசியையும் பெற்றுக் கொண்டு எனது வங்கிக் கணக்கிலிருந்து பணத்தினை நூதனமான முறையில் கொள்ளையடித்துள்ளனர். இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடளித்து தற்போது கௌரவ கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது. எனவே மேற்குறித்த எனது அடையாள அட்டையை பாவித்து ஏதாவது மோசடிகள் இடம்பெறலாம் என்பதனால் இத்தகவல்களை பொதுமக்களுக்கு அறியத்தருகினறேன். இந்த அடையாள அட்டையுடன் யாராவது தங்களை அணுகினால் அது தொடர்பில் எச்சரிக்கையாக செயற்படுமாறும் இது தொடர்பில் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறும் தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

(cs 57493) (N-1)

**துரைசிங்கம் தீபன்**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

**தோற்றம்** 16.03.1930 — **மறைவு** 12.02.2025

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 903, சில்வா வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் நேற்று (12.02.2025) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சுந்தரம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற விசாலாட்சி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், பொன்னம்மா, செல்லம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரரும், பேரின்பநாதன் (யாழ் பான்சி - யாழ்ப்பாணம்), இந்திராதேவி, பாக்கியநாதன் (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா வடக்கு வலயம்), பற்பநாதன் (திருத்தணிகை பல்பொருள் வாணிபம், வட்டக்கச்சி), சத்தியநாதன் (கிராம அலுவலர் , மாயவனூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரஞ்சனாதேவி மற்றும் கணேசமூர்த்தி, சிறீவாணி, தனலட்சுமி, ரஞ்சிதமலர் ஆகியோரின் மாமனாரும், பிரசாந்தன், பிரசன்னா, கஜனன் - பைந்தமிழ், துவாரகன் - அஜந்தா, கிருசாந், வித்தகன், யதுர்சன், நிவேதனா, யிதுர்சனா, லக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், ஆருத்ரா, ஆரா ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் இல 903, சில்வா வீதி, வட்டக்கச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

903, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல்: குடும்பத்தினர்
(CS/57496) J-1 077 650 9095, 077 704 0975

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 21 . 03 . 1955 — **மறைவு** 24 . 02 . 2024

### அமரர் சேனாதிராசா இராஜரட்ணம் (கண்ணன்)

நிலையில்லாத இப்பூவுலக வாழ்வில்
எமை நிரந்தரமாக விட்டுச்சென்று
ஓராண்டு நிறைவுற்றதோ....
நீங்கள் வாழ்ந்து காட்டிய பாதையின் வழி
நாமும் நின்றொழுகி வாழ்ந்திருக்க
தங்களின் ஆசியையும்
தங்களின் ஆத்மா இறைவனின்
திருவடிகளில் நிரந்தர சாந்தியையும் பெற
பிரார்த்திக்கின்றோம்.....!!

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
(CS 2514) A

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

# வீடுகளில் திருட்டு; சந்தேகநபர் கைது!

வவுனியா, பூவரசன்குளத்தில் நடந்த இருவேறு திருட்டுச்சம்பங்கள் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா குற்ற விசாரணைப்பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் வீடொன்றில் இருந்து கைத்தொலைபேசி ஒன்றும், மற்றொரு வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டிருந்தன.

இந்தத் திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் முருங்கனைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட கைத்தொலைபேசி மற்றும் மோட்டார்சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரகலய தீ வைப்புகளுக்கு ஜே.வி.பி.யே பொறுப்பு!

## குமுறுகின்றார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, பெப்.13

அரகலயவின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமைக்கு மக்கள் விடுதலை முன்னணி பொறுப்புக்கூறவேண்டும். இழப்பீட்டுத் தொகையைப் பட்டியலிடுவதைப்போன்று, தீ வைத்தவர்களின் விவரங்களை அரசாங்கத்தால் பட்டியலிட முடியுமா?

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் தனது இயலாமையை மறைத்துக்கொள்ள ஒன்று குரங்குகள் மீது பழி போடுகிறது அல்லது கடந்தகால அரசாங்கம் தொடர்பான அறிக்கைப் பட்டியலை வெளியிடுகிறது. ஆனால் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை.

போராட்டத்தின்போது எனது வீடு உட்பட 14 கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. எனக்கு எவ்வாறான அடிப்படையில் அந்தத் தொகை கிடைக்கப்பெற்றது என்பதை அமைச்சரவைப் பேச்சாளர் நாட்டு மக்களுக்கு அறிவிக்கவில்லை.

இந்தச் சம்பவத்துடனான வழக்கில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வன்முறையைத் தூண்டிவிட்டு அழிவை ஏற்படுத்தியவர்களின் பெயர் விவரங்களை அரசாங்கத்தால் பட்டியலிட முடியுமா?- என்றார். (ஏ-இ)

# மின்தடை நட்டங்களை மதிப்பிட நடவடிக்கை



கொழும்பு, பெப்.13

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்துண்டிப்பால் ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மின்சக்தி அமைச்சும், இலங்கை மின்சாரசபையும், மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கமும் மின்வெட்டுத் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன. மின்கட்டமைப்பில் ஏற்பட்ட சமநிலையற்ற தன்மை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இப்படியான பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றுக்கு நிரந்தத்தீர்வை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

மின்தடையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மின்சாரசபை இதுவரை எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. நட்டம் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஏ-இ)

# முனீஸ்வரன் ஆலயத்தில் சிறைச்சாலைத் தைப்பூசம்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணம் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் தைப்பூச வழிபாட்டு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

யாழ். சிறைச்சாலை அதிகாரி எஸ். இந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விசேடபூசை வழிபாடுகளும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (ச-41-23)




# ஊடகவியலாளர் பாரதியின் மறைவு தமிழ்த் தேசியத்துக்குப் பேரிழப்பே!

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப்.13

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவு, ஊடகத்துறைக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் ஆகப்பெரிய இழப்பு என்பதில் மறுகருத்தில்லை. ஏனெனில், ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாது பணியாற்றிய வெகு சில ஊடகவியலாளர்களில் பாரதி என்றும் தனித்துவமானவர் இவ்வாறு தனது இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

மூத்த ஊடகவியாலர் பாரதியின் மறைவை முன்னிட்டு அனுப்பிவைத்துள்ள இரங்கற் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

ஊடக அறம், ஊடக ஒழுக்கம், தற்துணிவு, தன்மானம் மற்றும் விடாமுயற்சி ஆகிய பண்புகளை ஒருமித்தும் ஒன்றிணைத்தும் கொண்டிருந்த ஒரு பெருந்தகையே மூத்த ஊடகவியலாளர் பாரதி என்றால் அது மிகையாகாது.

கொழும்பில் பணியாற்றுவதற்காகச் சென்ற ஊடகவியலாளர்கள் பலர், தேசிய நீரோட்டத்தில் 'தொழில் முறையாக' சங்கமித்து, தமிழ்த் தேசியத்தை விட்டு வெகுதூரம் சென்ற பதிவுகள் எம்மத்தியில் தாராளமாக உள்ளன. ஆனால், ஊடகவியலாளர் பாரதியின் பயணம் வேறுபாடானது. அவர் கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்பட ஆரம்பித்த போதிலும், தமிழ்த் தேசியத்தின்பால் தீராத பற்றும் பேரன்பும் கொண்டிருந்தார். அவரின் வேர் இந்தப் பூமிக்குரியது என்பதால், தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விட்டுக் கிஞ்சித்தும் விலகாமல் நேரிய - சீரிய - செயற்கரிய பணிகளை ஆற்றினார்.

ஒரு கையை இழந்த நிலையிலும், பேனாவை மறுகையாகவும் மாற்றுக் கையாகவும் உயர்த்தினார். தன்னம்பிக்கையின் முழுவடிவமாக ஊடகப் பரப்பில் வலம் வந்தார். ஊனம் என்பது எதற்கும் தடையல்ல என்பதை வார்த்தைகளால் அல்லாமல் வாழ்வால் நிரூபித்தவர் பாரதி. ஆதலால், அவரின் மறைவை 'ஊடகப் பரப்புக்கான' இழப்பு என்று குறுக்கிவிட முடியாது. உண்மையில் தமிழ்த் தேசியத்துக்கான பேரிழப்பே பாரதியின் மறைவு. அவரை தமிழர் தாயகம் கண்ணீருடன் இன்று அஞ்சலித்து வழியனுப்புகின்றது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ.பி.டி.பி.யின்

# முன்னாள் எம்.பி. திலீபனிடம் இந்தியப் பொலிஸ் விசாரணை

சென்னை, பெப். 13
ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபனிடம் இந்தியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
அவர் எதற்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டார் என்பது தொடர்பான தகவல்கள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.
ஆனால், சமூக வலைத்தளங்களில் அவர் இந்தியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்றவாறாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-110)

## மரண அறிவித்தல்

### ராஜேஸ்வரி பூபாலசிங்கம் (J.P)



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் (J.P) ராஜேஸ்வரி நேற்று (12.02.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 04 . 1945



இறப்பு
12 . 02 . 2025

### உமாகாந்த் மதுரநாயகி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)


வில்லையடி, கோப்பாய் வடக்கு கோப்பாயை வதிவிடமாக கொண்ட மதுரநாயகி உமாகாந்த் நேற்று (12.02.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - அரசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சபாரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற உமாகாந்தின் அன்பு மனைவியும், பத்மகாந்த், ஜெயகாந்த் (லண்டன்), ரஜனிகாந்த் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, சோதிலிங்கம், சிவஞானம் மற்றும் ஶ்ரீரங்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மாலினியின் மைத்துனியும், கமலேஸ்வரி, கீத்தா, சசீலா ஆகியோரின் அன்பு மிகு மாமியும், கபினேஷ், அனிஷ்கா, ஆருஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லையடி,
கோப்பாய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
076 731 7327

(CS 2515) A

## மரண அறிவித்தல்



### பறுனாந்து யேசுதாசன்

(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

மண்ணில் 26.04.1945
விண்ணில் 12.02.2025

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பறுனாந்து யேசுதாசன் (முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்) அவர்கள் நேற்று (12.02.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பறுனாந்து - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், செபஸ்ரி - வரவணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற றீற்றம்மா (மாணிக்கம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யேசுநாயகம் (அன்ரன்) மற்றும் மேரிஸ்ரெலா (றஞ்சிதம்) ஆகியோரின் சகோதரனும், றுபினாமேரி (யசோ- லண்டன்), டன்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யேசுநேசன் (ஈசன்- லண்டன்), சகுந்தலா (வினோதா - பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், லதீஷா (லண்டன்), திஷாலி (லண்டன்), விகாஷன் (பிரான்ஸ்), கிருத்திக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனி முத்து தேவராசா (அதிபர்), பெர்னபேற்றம்மா, செலஸ்ரீனுப்பிள்ளை, பேனாட் மற்றும் சிப்பிரியான் (சுவிடன்), காலஞ்சென்றவர்களான லில்லி மாகிறேட், றெஜினா மற்றும் எட்மன், காலஞ்சென்ற யோசப்ஜெயபாலன், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை, மற்றும் லூர்துமேரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதி நல்லடக்கமானது இன்று (13.02.2025) வியாழக் கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ஈசன் - 00447585009178
யசோ - 00447365288199
டயானா - 077 1959206

தகவல் :
குடும்பத்தினர்

(CS 2513) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

ஈடுபட்டனர். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகாக உள்ள பகுதிகளிலும், தையிட்டிக்குச் செல்லும் காங்கேசன்துறை பிரதான வீதி மற்றும் பருத்தித்துறை பொன்னாலை பிரதான வீதி உள்ளிட்ட பகுதிகளிலுமே பொலிஸார் இவ்வாறு தீவிர வீதிச் சோதனையிலும் பாதுகாப்புக் கெடுபிடியிலும் ஈடுபட்டனர். (அ-ம-125)

## திஸ்ஸ...

'எந்தவொரு சட்டவிரோத கட்டுமானத்தையும் ஏற்க இயலாது. ஆதலால், திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலம் தமிழர்களுக்கு உரியது என்பதால், அந்தக் காணிகள் தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்காக நாமும் இணைந்து குரல் கொடுப்போம்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் தெரிவித்தனர். (அ-ம-26)

## அர்ச்சுனா...

அர்ச்சுனா எம்.பி.யும் அவருடன் இருந்த பிறிதொருவரும் அனுமதியின்றித் தமது திறன்பேசியில் ஒருவரை வீடியோவாகப் பதிவுசெய்துள்ளனர். இதையடுத்து, இரு தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல் பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போதே அர்ச்சுனா எம்.பி.யால் பலமாகத் தாக்கப்பட்ட நபர் குருதிக் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவால் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறைப்பாடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-125-26)

## தொப்புள்கொடி...

நாள்களுக்கும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களை பிடிப்பது மட்டுமல்ல எமது கடல்வளத்தையே அவர்கள் நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல்வளம் இல்லாமல் போகின்றது.

எனவே, இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என்று தமிழக மீனவர்களுக்கு அறிவுறுத்தல்விடுக்கின்றோம். இலங்கையின் கடற்பரப்பு பொதுப்பயன்பாட்டுக்கு அல்ல. அதற்குள் அத்துமீறும் உரிமை உங்களுக்குக் கிடையாது.

எமது நாட்டில் கடல் வளங்களை அபகரிக்கின்றீர்கள். எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கின்றீர்கள். இந்த நாசகாரச் செயல்களைச் செய்த பின்னர், திரும்பிச்செல்லும் வழியில் எம்மைத் தொப்புள்கொடி உறவுகள் என்கின்றீர்கள். அக்கிரமங்களைச் செய்தபின்னர் தொப்புள்கொடி உறவுகள் என்று கூறுவதால் எந்தப் பயனும் இல்லை. தமிழக மீனவர்களுடன் சகோதரத்துவமாகவும், கண்ணியமாகவும், அன்பாகவும் இருக்கவே நாம் விரும்புகின்றோம். ஆனால், அவர்கள் தங்களின் செயற்பாடுகள் மூலம் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர் - என்றார். (அ-ம-26-125)

## சிறுமியைப்...

சிறுமியின் கழுத்தில் இருந்த சங்கிலியைக் காணாததையடுத்து, அவரின் குடும்பத்தினர் அது தொடர்பில் வினவியுள்ளனர். இதன்போதே, பிறிதொரு சிறுமி அந்தச் சங்கிலியைப் பெற்றுச் சென்றமை தெரியவந்துள்ளது. இதையடுத்து, மற்றைய சிறுமியை அழைத்து விசாரித்தபோது அவர், தனது தாயாரின் அறிவுறுத்தலுக்கு அமையவே இவ்வாறு செயற்பட்டதாகக் கூறியுள்ளார்.

இதையடுத்து, இளவாலைப் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபரான தாய் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-125)

## காலநிலைப்...

தில் நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில், ஜனாதிபதி அநுர நேற்று உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மானிட வர்க்கம் தொடர்பான முக்கியமான துறைகளில் எதிர்கால உத்திகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த மாநாடு உந்து சக்தியாக அமைகின்றது. சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரம்மிக்க தேசமொன்றைப் போன்றே வளமிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கிய மானதாக அமைகின்றது.

சைபர் பாதுகாப்புச் செயன்முறையை நோக்கி உலகம் இன்று நகர வேண்டியிருக்கின்றது. ரொபோக்களின் பயன்பாட்டால் தொழில் வாய்ப்புகளை இழக்கின்ற மனித சமூகத்தை வலுவூட்ட கல்வி, திறன் மேம்பாடு, புதிய தொழில் வாய்ப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். இவற்றை இணைத்த வகையில் சரியான வேலைத்திட்டங்கள் இன்று அவசியமாகவுள்ளன. அதற்காக உலகத் தலைவர்கள் ஒற்றுமையாகச் செயலாற்றவேண்டும்.

'நாங்கள் சகோதரர்கள் என்றவகையில் ஒன்றாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்' என மார்ட்டின் லூதர் கிங் கூறியுள்ளார். 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' என்பதை உருவாக்கிட ஒன்றுசேர்வோம் என்பதை இலங்கை மக்களும் 2024ஆம் ஆண்டில் வலியுறுத்தியுள்ளனர் - என்றார். (அ-ம-இ)

## பேச்சுகள்...

பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையும் ஓரணியில் இணைக்கும் விதமாக கடந்த சில வாரங்களாகப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தன. இரண்டாம்நிலைத் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுக்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்த நிலையில், உடன்பாடுகள் எட்டப்படாத நிலையில் நேற்றுடன் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட கூட்டணியாக பல கட்சிகள் ஒன்றிணையும் போது அதன் தலைவராக சஜித் நியமிக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ரணில் தரப்பு ஏற்றுக்கொள்ளாததைத் தொடர்ந்தே பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது. (அ-ம-இ)

## வர்த்தகத்தில்...

பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் கலந்துரையாடியுள்ளேன் என்று இலங்கைக்கான ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ தலைமையில் இலங்கையில் பணியாற்றும் ஐ.நா.வின் அனைத்து முகவர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் வடமாகாணத்துக்கு வருகைதந்திருந்தனர். வடக்கின் ஆளுநர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்து உரையாற்றும்போதே ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண மக்கள் முதற்தடவையாக ஓர் அரசாங்கத்துக்குப் பெருமளவு ஆதரவை வழங்கியுள்ளனர். எனினும், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பலவற்றை இன்னும் நிறைவேற்ற வில்லை. குறிப்பாக, ஜனாதிபதி அநுரவின் யாழ்ப்பாணப் பயணம் தொடர்பிலும், 'மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும்' என்று அவர் வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

வடமாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினர் முன்னெடுத்துள்ள வர்த்தக நடவடிக்கைகளால் சிவில் சமூகத்தினருக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலருடனும் கலந்துரையாடியுள்ளேன்.

வடக்கில் போதைப்பொருளின் தாக்கமும், பயன்பாடும் மிகையாக அதிகரித்துள்ளன. அவை உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் நாங்கள் கூடுதலான கரிசனை கொண்டுள்ளோம். இந்தப் பயணத்தின்போது, வடமாகாணத்தில் தொடர்ச்சியாகப் பலதரப்பினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். முன்னுரிமையின் அடிப்படையில் எமது திட்டங்கள் நிறைவேற்றப்படும் - என்றார்.

வடக்கு மாகாணத்தின் கல்வி, சுகாதாரம், குடிநீர் வசதி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்பட்டன. இந்தச் சந்திப்பின் முடிவில் சுகாதார நகரத் திட்டத்துக்கு யாழ்ப்பாண நகரம் தெரிவுசெய்யப்பட்டமைக்கான சான்றிதழும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியால் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. (அ-ம-இ)

## திஸ்ஸ விகாரையை...

நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்த போராட்டம், நேற்றும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் பெருமளவானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், நேற்று இன்னும் அதிகளவானோர் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

'விகாரையாகவே இருந்தாலும், அது பொதுமக்களின் காணிகளுக்குள் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ளதால் அது சட்டவிரோதக் கட்டுமானம்தான். எனவே, விகாரையை உடனடியாக இங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு எமது காணிகளை எம்மிடமே ஒப்படைக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முடிவு எவ்வாறு அமையப்போகின்றது என்பதை எதிர்பார்த்துள்ளோம்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின்போது பொலிஸார் கெடுபிடிகளில் ஈடுபட்டனர். இதனால், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. எனினும், அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், காணாமலாக்கப்பட்ட சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-125-26-66)

## கிணற்றிலிருந்து...

ளார். சற்குணராசா பிரதீபன் (வயது -29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த ஊடகவியலாளர்

# இராஜநாயகம் பாரதியின் இறுதிக் கிரியை இன்று!

யாழ்ப்பாணம், பெப். 13

மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் அஞ்சலி உரைகள் இடம்பெறும். முற்பகல் 11 மணியளவில் இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து அவரது பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுப் பிற்பகல் 1.30 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படுமென அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-66)

# நகுலேஸ்வரர் ஆலய கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், பெப். 13

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை09.35 மணி முதல் முற்பகல்11.35 மணி வரையுள்ள சுப வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பதினைந்து தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக ஆலய மஹோற்சவப் பெருவிழா இடம்பெறும்.

எதிர்வரும்25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும், 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 27 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை கண்டகி தீர்த்தக் கடலில் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார். (ச-66)

குரங்குகளுக்கு கருத்தடை

# திட்டம் தோல்வி

கொழும்பு, பெப். 13

நாட்டின் பல பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட குரங்குகளுக்கான கருத்தடை திட்டம் தோல்வியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குரங்குகளால் ஏற்படும் அச்சுறுத்தலுக்குத் தீர்வு காணும்நோக்கில் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தின் ஹரஸ்கமவில் முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் திட்டம் பல சவால்கள் காரணமாக தற்போது முடங்கியுள்ளது என்று மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அஜித மணிக்கும தெரிவித்துள்ளார்.

கருத்தடை செய்வதற்கு கால்நடை மருத்துவர்களின் பற்றாக்குறையும், கிரித்தலை கால்நடை மருத்துவப் பிரிவுக்கு குரங்குகளை ஏற்றிச்செல்வதற்கு அதிக செலவினங்கள் ஏற்படுவதும் முதன்மையான தடைகளாக உள்ளன என்றும் இந்தத் திட்டத்துக்குத் தேவையான உபகரணங்களுக்கு 12 மில்லியன் ரூபா செலவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# மெய்வன்மைப்போட்டி

சாவகச்சேரி, பெப். 13

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ம. லினாஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் க. உதயகுமாரன், வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 9)

# மெய்வல்லுநர் போட்டி

சாவகச்சேரி, பெப்.13

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150ஆவது நிறைவு ஆண்டின் ஆரம்பத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரியின் அதிபர் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற வட மாகாண கட்டடத் திணைக்களப் பொறியியலாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான எஸ்.சந்திரகுமார், விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவரான திருமதி பி.விமலந்தியா, தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனையின் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகரான என்.சிறீகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-411-31)

காணிகள் விற்பனைக்கு உண்டு

எம்மிடம் கோப்பாய் இராசவீதிக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், கட்டப்பிராய் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 193 3490
Whats App 077 084 0453
(cs.57495) (N-1)

விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

திருமுருகன் கொம்நெற்

பணியாளர் தேவை

321, K.K.S Road, Jaffna.
077 755 4528

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.01.2025 புதன்கிழமை அன்று சிவபதப்பேறு அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் பாசமிகு

அமரர் சண்முகநாதன் திபாஹரன்

(போதனாசிரியர், கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகம் - கொழும்பு)

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (14.02.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மேலும் எமது குடும்பக் குல தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து நேரிலும். தொலைபேசி மூலமும். ஊடகங்கள் மூலமும் துக்கங்களைப் பகிர்ந்தோருக்கும். மலர் வளையங்கள். மலர் மாலைகள். கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள். பதாகைகள் வெளியிட்டோருக்கும். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு

(CS/2512) J-1

குடும்பத்தினர்

# யாழ்.நீரியல்வளத் திணைக்களத்துக்கு கடற்றொழில் அமைச்சர் களவிஜயம்!

யாழ்ப்பாணம், பெப்.13

கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், கடற்றொழில், நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திடீர் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது மீனவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சேவைகள், சேவைகளை வழங்குவதில் உள்ள குறைப்பாடுகள், மீனவர்களின் தரவுகள், நிவாரணங்கள் என்பன பற்றியும் அமைச்சர் கேட்டறிந்தார். (ச- 25,125)



சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா தைப்பூசத் திருநாளான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-41-66)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org